C.C 13/2018
PW-3 தமிழ்ச்செல்வம் த/பெ.ராமசாமி
Date 20.11.2023

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. என்னிடம் அலைபேசி உள்ளது. அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களிடமும் அலைபேசி உள்ளது. எதிரி சாக்ரடீஸ் எனது அண்ணன் மகன் ஆவார். எதிரி போஸ் எனது அண்ணன் ஆவார்.

2. எனது ஊர் வெளியக்கோட்டை. எனது அண்ணன் போஸ் தேவகோட்டையில் வசித்து வருகிறார். கீழஅரும்புரில் வைத்து பிரியதர்ஷிக்கும் சாக்ரடீஸ்க்கும் திருமணம் நடைபெற்றது. எனது ஊருக்கும் கீழஅரும்புருக்கும் சுமார் 16 கிலோ மீட்டர் துூரம் இருக்கும்

3. கீழஅரும்புரில் எனது உறவினர்கள் நிறைய நபர்கள் உள்ளார்கள் என்றால சரிதான். எதிரி போஸ் தம்பி என்ற முறையில் என்னை திருமணத்திற்கு அழைத்திருந்தரா என்றால் வாய் மூலமாக சொல்லியிருந்தார்.

4. 05.09.2017ம் தேதி திருமணம் நடைபெறுவதற்கு முதல்நாள் எனக்கு மேற்படி திருமணம் பற்றி தகவல் சொன்னார். நான் அ.சா.1 னிடம் இந்த தகவலை சொன்னேனா என்றால் திருமணத்திற்கு சென்றபிறகு தான் சொன்னேன்.

5. எத்தனை மணிக்கு அ.சா.1 ற்கு தகவல் சொன்னேன் என்றால் 05.09.2017ம் தேதி நான் திருமணத்திற்கு சென்ற உடனே தகவல் சொல்லிவிட்டேன் எத்தனை மணி என்று ஞாபகம் இல்லை.

6. 05.09.2017ம் தேதி திருமணம் நடந்த சமயத்தில் போஸ் உடன் நான் நல்ல உறவு முறையில் தான் இருந்தேன். மேற்படி திருமணம் நடைபெற்ற சமயத்தில் நான் சும்மா தான் இருந்தேன்.

7. நான் அ.சா.1 ற்கு தகவல் சொன்ன பிறகு அ.சா.1 திருமண இடத்திற்கு எவ்வளவு நேரத்தில் வந்திருக்க முடியும் என்றால் தோரயாமாக சுமார் அரைமணி நேரத்தில் வந்திருக்க முடியும்.

8. நான் தகவல் சொல்லியும் அ.சா.1 அங்கு வரவில்லை. இந்த திருமண நிகழ்ச்சி எதையும் அ.சா.1 பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல திருமணம் நடைபெறவில்லை என்றாலும், எனது சகோதரர் போஸ் மீது உள்ள பிரச்சகனை காரணமாக அ.சா.1 ற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

9. அ.சா.1 சாக்ரடீஸ் மீதும், அவரது குடும்பத்தார் மீதும் பல வழக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்குகளுக்கும் நான் தான் பொய்யாக தாக்கல் செய்வதற்கு உறுதுணையாக இருந்தேன் என்றால் சரியல்ல.